**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.44
https://ngmtamil.in/

# ஆத்தி சூடியில் ஔவை கூறும் வாழ்வியல்

**திருமதி க.பானுப்பிரியா,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
அறச்சலூர், ஈரோடு 638 101. தொலைபேசி எண்: 7538886656
இணைய முகவரி : banupriyamed2020@gmail.com
**முனைவர் ப.திலகவதி, நெறியாளர்**
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி அறச்சலூர், ஈரோடு 638 101.
தொலைபேசி எண்: 9345643788

**முன்னுரை**

இன்றைய வாழ்வில் குளிக்கும் முறையிலும், உணவு உண்ணும் முறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆண் மற்றும் பெண் இருவரும் பணிக்கு செல்லும் சூழலில் பகல் மற்றும் இரவு நேர பணி என்ற அடிப்படையில் கணினி துறையில் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்களுக்கு சரியான தூக்கம் இல்லாமல் போய்விடுகின்றன. மனித வாழ்வியலில் இந்த முறையில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஔவையார் ஆத்திச்சூடியில் கூறியுள்ள செய்திகளை இவ்வாய்வில் காண்போம்.

**பிற்கால அற நூல்கள்**

சங்கம் மருவிய காலங்களில் அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும் நீதி நூல்கள் பல தோன்றின. பின் பிற்காலத்தில் அறநூல்கள் பல தோன்றியுள்ளன. நூல்கள் எளிமையாகவும், இனிமையாகவும் ,மக்களின் வாழ்க்கைக்கு தேவையான முறையில் கூறும் வகையில் அமைந்துள்ளது. ஆத்திச்சூடி,கொன்றை வேந்தன் ,மூதுரை, நல்வழி ,ஔவைக்குறள் ,அறநெறிச்சாரம் ,வெற்றி வேற்கை ,நீதிநெறி விளக்கம், நன்னெறி ,உலக நீதி மற்றும் ஆத்திச்சூடிகள் போன்ற பல நூல்கள் தோன்றியுள்ளன.

**புதிய ஆத்திச்சூடிகள்**

பாரதியார்,பாரதிதாசன், வா.சுப.மாணிக்கம் ,சாமி ஐயப்பன்,தமிண்ணல் ,புலவர் சோம இளவரசு, வாணிதாசன் போன்றோர்கள் ஆத்திச்சூடியில் பல கருத்துக்களை கூறியுள்ளார்கள். இவை மட்டும் இல்லாமல் மேலும் பல ஆத்திச்சூடி நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

**ஔவையார் எழுதிய நூல்கள்**

ஆத்திச்சூடி,

கொன்றைவேந்தன்,

மூதுரை,

நல்வழி,

ஔவைக்குறள்

போன்ற நூல்களை ஔவையார் எழுதியவை ஆகும்.

ஔவையார் பலர் உள்ளார்கள் என்ற கருத்துக்கள் இருக்கின்றன. இந்த செய்தி உண்மை என்று நம்புகின்ற அளவில் சான்றுகள் இருக்கின்றது. சங்க இலக்கிய நூல்களில் எட்டுத்தொகையில் அகம் மற்றும் புறம் சார்ந்த பல பாடல்களை ஔவையார் பாடியுள்ளார். மேலும் பிற்கால நீதி நூல்களில் ஔவையார் எழுதிய நூல்கள் இடம் பெற்றுள்ளன. சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய காலத்தின் பிற்காலத்தில் தோன்றிய நூல்களில் காலங்கள் வெவ்வேறாக உள்ளது ஆகையால் ஔவையார் பலர இருந்துள்ளார்கள். சங்க மருவிய காலத்தில் நீதி நூல்கள் தோன்றின பின் கிபி 12ஆம் நூற்றாண்டில் ஔவையார் கருத்துக்களை பின்பற்றி எளிமையான நடையில் பிற்கால நீதி இலக்கியங்கள் தோற்றம் பெற்றது.

**ஆத்திச்சூடி குறிப்புகள்**

ஆத்திச்சூடியின் ஆசிரியர் -ஔவையார்

ஆத்திச்சூடியில் இடம்பெற்றுள்ள பாடல் எண்ணிக்கை 108

ஆத்திச்சூடி நூலில் கடவுள் வாழ்த்து பாடப்பட்டுள்ள கடவுள்-ஆத்தி மாலை அணிந்து சிவன்

ஆத்திச்சூடி உரை எழுதியவர்- 1898 எஸ். சாமிநாத ஐயர் மற்றும் 1968 கா பச்சையப்ப முதலியார்.

அற நூல்களில் அகர நிரல் வரிசையில் எழுதப்பட்ட முதல் நூல் ஆத்திச்சூடி ஆகும்.

**கணக்கும் இலக்கணமும்**

பணம் எவ்வளவு உள்ளது என்பதை சரி பார்க்க அடிப்படையாக கணக்கு தெரிந்திருக்க வேண்டும். நம் வாழ்வில் கணக்கு மற்றும் இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும் என்ற செய்தியை,

**எண்ணெயும் திகழேல் 7**

என்ற பாடல் வரியில் மனிதனுக்கு அடிப்படையாக கணக்கும் ,இலக்கணமும் தெரிந்திருக்க வேண்டும் என்ற செய்தியை ஔவையார் கூறியுள்ளார். மேலும் இதே செய்தியை,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**எண்ணு மெழுத்தும் கண்ணெனத் தகும் பா எ7 ப எ34 கொன்றைவேந்தன்**

கணிதம் மற்றும் இலக்கணம் தெரிந்து இருக்க வேண்டும் என்ற செய்தியை ஔவையார் கொன்றை வேந்தன் என்ற நூலிலும் கூறியுள்ளார்.

கணிதம் இலக்கணம் ஆகிய இரண்டையும் நன்கு கற்று அறிந்தால் வாழ்வில் அடிப்படையான செய்திகளை தெரிந்து கொண்டு வாழ்வில் வெற்றி அடைய முடியும்.

இல்லையென்று கேட்டு வருபவர்களுக்கு தம்மிடம் உள்ள பொருட்களை கொடுத்து உதவ வேண்டும். ஏழ்மையில் இருப்பவர், கண் தெரியாதவர்,ஊனமுற்றோர் ஆகியோருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை,

**ஐய மிட்டுண்9**

என்ற பாடல் வரியில் ஔவையார் கூறியுள்ளார்.

**ஐயம் புகினும் செய்வன செய் பாஎ9ப எ34**

என்ற செய்தியை பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்றால் யாசகம் பெற்றாவது செய்ய வேண்டும் என்பதை கொன்றை வேந்தனில் கூறப்பட்டுள்ளது.

நமது நடைமுறை வாழ்வில் நல்ல மற்றும் கெட்ட நிகழ்வுகளில் எண்ணையும் அரபையும் தலையில் தேய்த்து குளிக்கும் பழக்கத்தை பின்பற்றி வருகின்றோம். தீபாவளி,ஆடிப்பெருக்கு, திருமணம் ,பூப்பெய்தல் விழா மற்றும் இறப்பு நிகழ்வுகளில் நல்லெண்ணெய், அரப்பு ஆகிய இரண்டையும் தேய்த்து குளித்து வருகின்றோம். இன்றும் சனிக்கிழமை நாட்களில் எண்ணெய் தேய்த்து குளிக்கும் பழக்கத்தை பின்பற்றி வருகின்றோம். சனிக்கிழமை அன்று எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும் என்ற செய்தியை,

**சனிநீ ராடு 16**

என்ற பாடலில் ஔவையார் கூறியுள்ளார்.

எண்ணெய் தேய்த்து குளிப்பதால் உடம்பில் உள்ள வெப்பத்தை தணிக்கின்றது. உடலில் உள்ள நரம்பை புத்துணர்ச்சியுடன் இருப்பதற்கு உதவி செய்கிறது. உடல் பொலிவாகவும், ரத்த ஓட்டம் சீராக இயங்குவதற்கும் எண்ணை தேய்த்து குளிக்கும் முறை மனிதனுக்கு பயனுள்ள வகையில் அமைந்துள்ளது என்பதை பிற்கால அறிவியல் முறையில் கண்டுபிடிக்கப்பட்ட செய்தியாகும்.

நடைமுறை வாழ்வில் நீதிமன்றங்களில் உண்மை யாரிடம் உள்ளது என்பதை ஆராயாமல் நமக்கு பணம் அதிகம் தருகின்றார்கள் என்பதை மட்டும் பார்த்து குற்றம் செய்யாதவர்களாக இருந்தாலும் குற்றவாளி என நிரூபித்தும்தவறு செய்தவரை தண்டனையிலிருந்து விடுவித்து விடுகிறார்கள். தவறு செய்தவர்களின் மூலம் தவறு செய்யாதவர்கள் மேலும் துன்பப்படுகிறார்கள் இந்த செய்தியை ஔவையார்

**மன்றுபறித் தூண்ணேல் 23**

என்ற வரியில் ஆத்திச்சூடியில் அவ்வையார் கூறுகிறார்.

விவசாயம் செய்வதற்கு நிலத்தை பயன்படுத்தி இருக்க வேண்டும். மழைக்காலங்களில் நெல் பயிரை பயிரிட வேண்டும். மழை இல்லாத காலங்களில் தினை பயிர்களான சோளம் எள் கொள்ளு கம்பு போன்ற பயிர்களை பயிர் செய்தால் பயனுள்ளதாக அமையும். விவசாயத்தில் எந்த காலத்தில் எந்த பயிர் செய்தால் நன்கு வளர்ந்து நல்ல விளைச்சலை தரும் பயிரை பயிரிட வேண்டும் என்பதை

**பருவத்தே பயிர் செய் 22**

என்ற பாடல் வரியில் ஔவையார் கூறியுள்ளார்

விலங்குகளை பிடித்து விளையாட கூடாது அப்படி விளையாடினால் தனக்குத்தான் துன்பம் ஏற்படும். நாயுடன் விளையாட கூடாது அது நம்மை கடித்து விடும் . பாம்பை வைத்து விளையாட கூடாது அப்படி பாம்பை வைத்து விளையாடினால் அந்த பாம்பே தன்னை தீண்டிவிடும் என்பதை

**அரவ மாட்டேல் 25**

என்ற பாடல் வரியில் ஆத்திச்சூடி கூறப்பட்டுள்ளது.

ஆடும் பாம்பு ஆண்டும் அறிவியலிலும் 19.3 (திரிகடுகம்)

என்ற பாடலில் நல்லாதனார் விளக்குகிறார்.

இலவம் பஞ்சு மெத்தையில் தூங்குவதால் நன்றாக தூக்கம் வரும். இம்மத்தையில் குளிர் மற்றும் கோடை காலத்திற்கு ஏற்ற வகையில் இதன் அமைப்பு அமைந்துள்ளது. இலவம் பஞ்சல் செய்த மெத்தையில் படுத்து உறங்க வேண்டும் என்ற கருத்தை

**இலவம் பஞ்சிற் துயில்26**

என்ற பாடல் வரிகள் ஔவையார் கூறியுள்ளார்.

நம்முடைய பழக்கவழக்கங்கள் அதிகாலையில் எழுந்து காலை கடமைகளை செய்து அதன் பின் நம்முடைய அன்றாட பணிகளை செய்யத் தொடங்குகிறோம் மற்றும் சூரியன் மறையும் முன்பே உணவை உண்டபின் உறங்க சென்று விடுகிறோம் இதுதான் நம்மளுடைய பழக்கவழக்கமாக இருந்துள்ளது.அதிக நேரம் தூங்க கூடாது என்ற கருத்தை

**அனந்த லாடேல்3**

என்ற வரியில் ஆத்திச்சூடியில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய வாழ்வியல் முறையில் உணவு உண்ணும் முறையும் உறங்கும் முறையும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒன்று பணியின் நிமித்தமாகவும் மற்றொன்று இரவு நேரங்களில் தொலைபேசியை அதிக நேரம் பயன்படுத்துகிறோம். இதனால் சரியான தூக்கம் இல்லை. காலையில் அதிகாலையில் எழுந்திரிக்க முடியாமலும் போய்விடுகின்றன. இதனால் நமக்கு மன அழுத்தம் வேகமாக செல்லக்கூடிய வழக்கம் அதன் மூலம் எப்படி என்ற விபத்து பிரச்சினைகள் போன்றவை இன்றைய

வாழ்வில் இருந்து வருகின்றனர். இதை நாம் சரியான முறையில் உறங்கச் சென்று அதிகாலையில் விழிந்தால் உடலளவிலும் மனதளவிலும் ஆரோக்கியமாக இருக்கலாம்.

ஒரு கைத்தொழிலை தெரிந்திருக்க வேண்டும் அதை பிறருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதையும்

**கைவினை கரவேல்40**

இந்த பாடலில் ஔவையார் கூறியுள்ளார்.

நான் படித்திருந்தாலும் படிக்காமல் இருந்தாலும் தமக்கென்று ஒரு கைத்தொழிலை தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த கைத்தொழில் நமக்கு துன்பம் ஏற்படும் சூழலில் வருவாய் ஈட்டுவதற்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும் சுயமரியாதை உடன் இருக்கவும் இந்த கைத்தொழில் பயனுள்ளதாக இருக்கின்றது. இன்றைய காலங்களில் பெண்கள் ஆரி ஒர்க், டைலரிங், மெஹந்தி, ஆடை அணிவித்தல் தொழில், ஆடை வடிவமைத்தல் தொழில் போன்றதொழில்களை இணைய வழியில் வீட்டிலிருந்து கற்றுக்கொண்டு அதன் மூலம் ஒரு வருவாயை ஈட்டி வருகின்றார்கள் என்பதை இன்றைய காலங்களில் பார்க்க முடிகிறது.

நாம் பேசும் பேச்சை பிறர்க்கும் சினம் மற்றும் வெறுப்பு ஏற்படும் படி பேசக்கூடாது என்ற செய்தியை

**களிக்கச் சொல்லேல்**

என்ற பாடல் வரிகள் நாம் பேசும் பேச்சு மற்றவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்துமா என்பதை ஆராய்ந்து பார்த்து இடம் பொருள் ஏவல் ஏற்ற வகையில் நம்மளுடைய பேச்சு அமைந்திருந்தால் நல்வழியில் அமையும்.

சூதாடும் விளையாட்டை என்றும் விளையாட கூடாது என்பதை

**சூது விரும்பேல் 48**

இந்தப் பாடகி ஔவையார் கூறியுள்ளார்.

சூதாடும் விளையாட்டை இணையவளியில் விளையாடுவதற்கு ஏற்ற வகையில் செயலிகள் உருவாக்கப்பட்டு மக்கள் அவர்களுடைய பணத்தை வீண் செய்கின்றார்கள். அன்றைய காலகட்டங்களில் ஊர்மன்றத்தில் சூதாடும் வழக்கம் இருந்து வந்தன. ஆனால் இன்று

ஒரு செயலை செய்து முடிக்க முடியும் என்பதை ஆராய்ந்து அந்த செயலை செய்து முடிக்க வேண்டும் என்ற கருத்தை

**தூக்கி வீனை செய் 59**

என்ற வரிகளில் ஔவையார் கூறியுள்ளார்.

நாம் ஒரு செயலை செய்து முடிக்க முடியுமா என்பதை பார்த்த பின்பு அந்தசெயலை தொடங்கி அச்சையில் முழுமையாக செய்து முடிக்க முடியும்.

நீரில் நீந்தி விளையாட கூடாது என்ற கருத்தை

**நீர் விளை யாடேல்68**

என்ற பாடலில் ஔவையார் கூறியுள்ளார்.

பெரியவர்கள் தண்ணீரில் அதிக நேரம் விளையாட கூடாது என்று கூறுகின்றார்கள் . அதற்குக் காரணம் நீச்சல் தெரிந்திருக்க வேண்டும் நீச்சல் தெரிந்திருந்தால் அதிக தண்ணீர் இருந்தால் சுழல் பகுதிகள் இருக்கும் அதில் அடித்துச் செல்லும் மேலும் அதிக நேரம் தண்ணீரில் குளித்தால் பாதம் கைகள் தண்ணீரில் ஊறிடும் சிறிய கூர்மையான கற்கள் மூலம் படும்பொழுது காயங்கள் ஏற்படும் மேலும் காய்ச்சல் மற்றும் சளி போன்ற நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

நோயை தருகின்ற உணவுகளை சாப்பிட**க்கூடாது என்ற செய்தியை,**

**நுண்மை நுகரேல் பா எ 69**

என்ற பாடலில் ஆத்திச்சூடியில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய உணவு முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. காலையில் இட்லி,தோசை,பொங்கல் போன்ற உணவு முறையும் மதிய வேளையில் சாப்பாடு பொரியல் பருப்பு ராம் தயிர் இரவு வேளையில் தோசை இட்லி சப்பாத்தி போன்ற உணவுப் பழக்கங்களில் வீடுகளில் பின்பற்றி வருகிறோம். இது கடைகளில் உணவு உண்பவர்கள் அதிகப்படியான பொடிகள் அஜினமோட்டார் போன்ற வை பயன்படுத்தப்பட்ட உணவுகளையே அதிகம் உட்கொள்கிறார்கள் இதனால் அவர்களுக்கு உடல்நிலை சரி இல்லாமல் போகின்றது. இரவு நேரங்களில் பிரயாணி போன்ற உணவுகளை உண்பதால் செரிமான பிரச்சனைகள்ஏற்படுகிறது. ஆனால் நம்முடைய உணவு முறை எது என்றால் கம்பு திணை ராகி போன்று திணைகளை சமைத்து சாப்பிடும் பழக்கம் இருக்கின்றன. இந்த உணவு முறைகளை பின்பற்றியதால் உடல் ஆரோக்கியத்துடன் வலிமையுடனும் இருக்கின்றார்கள். நோயின்றியும் அதிக ஆயுள் காலம்வாழ்ந்து இருந்திருக்கிறார்கள். நம்மளுடைய உணவு முறை நீராகாரம் ராகி களி அதற்கு கீரை கடையல்,நிலக்கடலை சட்னி, அசைவ வகையில் உணவுகளை சமைத்து சாப்பிட்டார்கள்.

விளைச்சல் செய்யும் இடத்தை விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமாக மாற்றிய அதன்பின் பயிர் செய்ய வேண்டும் என்ற செய்தியை

**பூமி திருத்தியுண்87**

என்ற பாடல் வரியில் கூறப்பட்டுள்ளது.

விவசாயம் செய்வதற்கு நிலத்தை முதலில் பண்படுத்திக் கொள்ள வேண்டும் எந்த பயிர் செய்கிறோம் என்பதற்கு ஏற்ற அடியுரங்கள் பயன்படுத்த வேண்டும் இயற்கை சார்ந்த உரங்களை மட்டுமே பயன்படுத்தினால் நல்ல பலனை பெற முடியும். ஆனால் இன்றைய காலகட்டங்களில் செயற்கை உரங்களையே அதிகம் பயன்படுத்துகிறோம் அதன்மூலம் அதிக விளைச்சலை பெறுகிறோம் என்ற

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நம்பிக்கையில் சத்துக்கள் இல்லாமல் மருந்துகள் மூலம் கிடைத்த தானியங்களை நாம் பெறுகிறோம் என்பதை உணர்ந்தும் தெரிந்தும் அதையே உணவாக பயன்படுத்தி வருகின்றோம்.

தினந்தோறும் சூரியன் உதயமாகும் முன்பே உறக்கத்திலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற செய்தியை

**வைகறைத் துயிலெழு10**

என்ற பாடல் வரிகள் ஔவையார் கூறியுள்ளார்

அதிகாலையில் எழுந்திருத்து நமது கடமைகளை செய்ய வேண்டும் என்பதை மேலே குறிப்பிட்டுள்ள பாடலில் பார்த்துள்ளோம் அதிகாலையில் சூரியன் உதயமாவதற்கு முன்பே எழுந்திருக்க வேண்டும் என்பதை கூறப்பட்டுள்ளது ஆனால் இன்றைய காலங்களில் சூரியன் உதயமாகும் காட்சியில் இளைஞர்கள் பார்ப்பதே இல்லை அதற்கு காரணம் அவர்கள் கணினி துறையில் பணி புரிவது காரணமாகவும் நம்ம ஏற்றுக் கொள்ளலாம் மற்றும் அவர்களுடைய பழக்க வழக்கமும் காரணமாக உள்ளது.

இன்றைய காலங்களில் இலவம் பஞ்சில் மெத்தை உருவாக்கி அதில் உறங்குகிறார்கள். அது மென்மையாகவும் உறங்குவதற்கு வசதியாகவும் இருக்கின்றது. இன்றைய காலத்தில் இலவம் பஞ்சு மெத்தைக்கு அதிக பணம் கொடுத்து வாங்கி பயன்படுத்துகின்றார்கள். இலவம் பஞ்சல்தான் உறங்க வேண்டும் அதிலும் அதிக நேரம் தூங்க கூடாது இளமையிலேயே படிக்க வேண்டும் விளைநிலத்தை உரங்களை இட்டு பயிர் விதைத்து அதன் மூலம் கிடைக்கின்ற உணவை உண்ண வேண்டும் என்ற செய்தி ஆத்திச்சூடியில் கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இன்றைய பழக்கவழக்கங்களில் எந்த ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் இல்லாமலே இருக்கின்றது அதற்கு காரணம் நம்முடைய வாழ்வில் ஏற்பட்டுள்ள பணி சுமையும் கால சூழ்நிலையுமே காரணமாக அமைந்துள்ளது. இன்றைய கிராமங்களில் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து வேலை செய்யும் வழக்கமும் இருக்கின்றது இயற்கையோடு வாழ்க்கையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

**பார்வை நூல்கள்**

[1.] நீதி நூல்கள்- நாவலர் ந.மு வேங்கடசாமி நாட்டார்

[2.] உரையாசிரியர்கள் -மு வை அரவிந்தன்

[3.] பிற்கால நீதி இலக்கிய வரலாறு-டாக்டர் கதிமுருகு

[4.] திரிகடுகம் - ந.மு வேங்கடசாமி நாட்டார்

[5.] வெற்றி நோக்கில் இலக்கணம் இலக்கிய வரலாறு மொழித்திறன்-பேரா.முனைவர் பாக்யமேரி

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)